THE HON. SRI M. A. MANICKAVELU : எந்த ஆஸ்பத்திரிகளை அவசியம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது, கனம் அங்கத்தினர்கள் சில ஆஸ்பத்திரிகளை அவசியம் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கிளர்ச்சி செய்வது—இவைகள் எல்லாம் கருத்தில் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

SRI N. R. THIAGARAJAN : மதுரை ஜில்லாவில் நிலக்கோட்டை தாலூகாவிலுள்ள ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரியை சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சென்ற ஒன்பது ஆண்டுகளாக சர்க்காருக்கு விண்ணப்பங்கள் எழுதி வந்திருக்கிறோம். இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் ஆஸ்பத்திரிகள் பட்டியலிலாவது அது சேர்க்கப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த ஆஸ்பத்திரி இந்த ஆண்டு கட்டாயம் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்படும்.

By-products from lignite in Neyveli

* 126 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the industries that could be started with the by-products available from lignite in Neyveli; and

(*b*) the steps taken to start them?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) It is possible to establish a number of industries based on the by-products available in the mining and processing of lignite, such as synthetic petrol, char dust, tar, phenol, cement, plastics, porcelain and sanitary-ware, electrical insulators, etc.

(*b*) Steps can be taken to set up these industries only after conducting pilot plant trials to find out the most efficient and economic processes with reference to the climatic and other conditions obtaining at Neyveli in briquetting and carbonising lignite.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, as it is, is there any planned programme to utilize these by-products?

THE HON. SRI R. VENKATARAMAN : One company has been granted licence by the Government of India for setting up High Tension Insulatory factory and that will utilize the clay.

SRI A. A. RASHEED : Cannot we have coal tar dyestuffs from lignite?

THE HON. SRI R. VENKATARAMAN : All by-products arising out of tar can be manufactured there.

SRI K. ANBAZHAGAN : நெய்வேலியில் வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரியிலிருந்து உப பொருள்கள் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளையும் நிர்வாகத்தையும் நமது மாநில சர்க்காரே நடத்துவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா, அல்லது அந்த வேலைகள் தனிப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப் படுமா, அல்லது மத்திய சர்க்காரால் நிர்வகிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 'ஸப்ஸிடியரி இன்டஸ்ட்ரீஸ்-ஐப் பொருத்த அளவில் தனிப்பட்டவர்களுக்கு அந்தத் தொழில்கள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது தான் சர்க்காரின் கொள்கை.